ஒரு துணை அமைச்சருக்குப் பொறுப்பளித்து, அதன்மீது ஒரு விரைவான முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்மீது நம்முடைய மாநிலத்தின் கருத்தை வலுவாகச் சொல்லி இருக்கிறோமா? அதன் மூலம் 500 கோடி ரூபாய் அளவிற்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதற்கான முயற்சியை நமது அரசு எந்த வகையிலே மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, ஏற்கெனவே மைய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டிருக்கிறது. தொடர்ந்து அது வலியுறுத்தப்படும். அதைவிட முக்கியம், இதுபோன்ற பணிகளுக்கு 'Grants' என்ற முறையிலே தரக்கூடிய நிதியைக்கூட மிகவும் குறைத்து விட்டார்கள். அந்த Grants-லேகூட பாரபட்சம் நடக்கிறது. இதை நாங்கள் திட்டக் குழுவிடம் பேசுகிறபோது பெரிதும் வலியுறுத்தியிருக்கிறோம்; ஒப்பிட்டுப் பேசுகிறோம். அவர்கள் எப்படி, எப்படிப் பிற மாநிலங்களுக்கு அதாவது நம்மைவிட பாதிப்பு மிகக் குறைவான மாநிலங்களுக்கு அதிகப்படியான Grant என்ற முறையிலும், பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்ற தமிழகத்தைப் போன்ற மாநிலங்களுக்கு மிகக் குறைவான Grant என்ற முறையிலும் வரையறை இல்லாத நிலையினைக் கடைப்பிடித்து வருகிறார்கள். மைய அரசிற்கு வேண்டியவர்கள் என்றால் ஒன்று; வேண்டாதவர்கள் என்றால் ஒன்று. அதைவிட மிக முக்கியம் வடபுலத்து மாநிலங்களுக்கு வெளிப்படையாகவே துணிச்சலோடு பாரபட்சமான நிதி ஒதுக்கீட்டை மைய அரசு செய்து வருகிறது. அதைத்தான் நாங்கள் கண்டித்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

76—

மருத்துவமனைக் கட்டடம்

***61—திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 செப்டம்பர் 11]

வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் அரசு பொது மருத்துவமனைக் கட்டடம் ரூபாய் பத்து இலட்சம் செலவில் கட்டும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட, அக்கிராமத்தில் அருள்மிகு அபயவரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு, நிலக் கிரயத் தொகையை ஊர்ப் பொதுமக்கள் செலுத்தி, பொதுச் சுகாதாரத் துறைக்கு நிலமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் பெறப்பட்டவுடன் கட்டட கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் மற்றும் காவேரிப்பாக்கம் கிராமம் அபயவரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி கிராமத்திலுள்ள புல எண் 1316/2-ல் 1.35 ஹெக்டேரில் 0.40 ஹெக்டேர் நிலம் அதாவது 1 ஏக்கர் நிலத்தை ரூபாய் 1,42,041-க்கு கிராமப் பொதுமக்கள் சார்பாகக் காவேரிப்பாக்கம் பேரூராட்சித் தலைவர் சுகாதாரத் துறைக்கு விலைக்கு வாங்கிக் கொடுக்க முன்வந்துள்ளதை ஏற்று, காவேரிப்பாக்கம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட விற்பனை செய்ய சட்டப் பிரிவு 34-ன்கீழ் அரசுத் துறைச் செயலாளர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களிடமிருந்து இந்து சமய அறநிலையத் துறைக்கு 22-6-2001-ல் அரசு உத்தரவு வரப்பெற்று, அதன் அடிப்படையிலே கடந்த 10-7-2001 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பு 19-7-2001-ல் வேலூர் தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டது. இப்பொருள் குறித்து, சென்னை-34, கதவு எண் 119, மகாத்மா காந்தி சாலையிலுள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் அலுவலகத்தில் 17-8-2001 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது எந்தவிதமான ஆட்சேபணையோ, ஆலோசனைகளோ பெறப்படவில்லை என்று அறியப்பட்டு, இந்தக் கோயில் சம்பந்தமாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் சொல்ல வேண்டிய பதிலை நீங்களே சொன்னால் எப்படி?

திரு. இரா. வில்வநாதன்: இந்தத் திருக்கோயிலுக்குச் சம்பந்தமான பணம் கட்டுவதற்குண்டான அரசு ஆணை வழங்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு கூடிய விரைவிலே காவேரிப்பாக்கத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இந்து சமய அறநிலையத் துறையினுடைய ஆளுகைக்குட்பட்ட அந்த நிலத்திற்கு 1,42,041 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து அதை நிலமாற்றம் செய்வதற்கு அந்தத் துறை ஒத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொகையையும் பொதுமக்கள் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, அந்த நிலமாற்ற நடவடிக்கை எடுப்பதற்கு வேலூர் துணை இயக்குநர் அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிலமாற்றப் பணி முடிக்கப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

77—

குடிநீர்

***2093-அ—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு ஒன்றியம், தோடனேரி பஞ்சாயத்து, கல்லிக்குடி கிராமத்திற்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தோடனேரி ஊராட்சியிலுள்ள கல்லிக்குடி குடியிருப்பில் தற்போதைய மக்கள் தொகை 700 ஆகும். தற்போது ஆழ்துளைக் கிணறு இரண்டும்,

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS